பதிவுத்துறை

அனுப்புநர்

திரு.ந. தனம் ஜெயன், இ.ஆ.ப.,
பதிவுத்துறைத்தலைவர்,
100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை – 28.

பெறுநர்

அனைத்து துணைப்பதிவுத்துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்.

<u>கடித எண்.64839/ஜி2/2005, நாள் 23.2.2006</u>

அய்யா/அம்மையீர்,

பொருள் : பிறப்பு இறப்புப் பதிவு முஸ்லீம் இனத்தவரை பிறப்பு இறப்பு பதிவேடுகிளில் மதம் எனும் கலத்தில் இஸ்லாம் என குறிப்பது - தொடர்பாக.

பார்வை : 1. ஆணையாளர், சேலம் மாநகராட்சி, எச்6/16810/2005 நாள் 25.10.2005

****

பார்வை 1ல் கண்ட கடிதத்துடன் அரசாணை (நிலை) எண்.58, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிநஆபி)த்துறை, நாள் 08.06.2005 நகல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

மேற்படி ஆணையில் தெரிவித்துள்ளவாறு செயல்பட அறிவுறுத்தப்படுகிறது.

/ஆணையின் படி/

பதிவுத்துறைத்தலைவருக்காக

இணைப்பு :

நகல் : 1. இணைய தளம்.
2. பதிவுத்துறை பயிற்சி நிலையம்.
மு.ஆ.கோ.

Verified RealEstate

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சிறுபான்மையினர் நலம் - முஸ்லீம் இனத்தவரை பள்ளி பிறப்பு இறப்பு பதிவேடுகளில் மதம் பற்றி குறிப்பிடுகையில் “இஸ்லாம்” எனக் குறிப்பிடல் - ஆணைகள் - வெளியிடப்படுகிறது.

-- -

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிநஆபி)த்துறை

அரசாணை (நிலை) எண்.58 நாள் 08.06.2005,
திருவள்ளுவர் ஆண்டு 2036
பார்த்திப வருடம் வைகாசி, 25

படிக்கப்பட்டவை :

1. தமிழ்நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் 02.08.2000 நாளிட்ட கடிதம்.
2. ஆணையர் மற்றும் இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, எ.டி3/30001/2000, நாள் 03.01.2001 மற்றும் 15.10.2003.
3. மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர் செயலர் 07.08.2001, நாளிட்ட கடித எண்.ஏ1/25/2000.
4. தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மை செயல் அலுவலரின் கடித எண் 2692/01/ஈ5, நாள் 13.12.2001, 07.06.2002, 07.08.2002 மற்றும் 09.01.2003.

ஆணை :-

தமிழ்நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் தலைவர், முதலாவதாக படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் பிறப்பு பதிவு நிலையங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் முஸ்லீம் குழந்தைகளைப் பதிவு செய்யும் போது மதம் என்னும் இடத்தில் ‘முஸ்லீம்’ என்று பதிவு செய்துவிடுகிறார்கள் என்று தெரிவித்துள்ளார். முஸ்லீம்களின் மதம் “இஸ்லாம்” என்றும், இஸ்லாம் சமயத்தை ஏற்றுள்ளவர்கள் முஸ்லீம்கள் ஆவர் என்றும், இஸ்லாம் என்று இருக்க வேண்டிய இடத்தில் முஸ்லீம் என்று பதிவு செய்துவிடுவதால், பிற்காலத்தில் பல குழப்பங்கள் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, பதிவு நிலையங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் மற்றும் அரசு துறைகளிலும் முஸ்லீம் மதம் என்று குறிப்பிடும் இடத்தில் ‘இஸ்லாம்’ என்று குறிப்பிட்டு பதிவு செய்வதற்கு அரசு மற்றும் கல்வித்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தமிழ்நாடு வக்ஃபு வாரியம், முதன்மை செயல் அலுவலர், பள்ளிப் பதிவேடுகள், பிறப்பு இறப்பு பதிவேடுகள் உட்பட அனைத்து ஆவணங்களிலும் முஸ்லீம்களின் மதம் பற்றிய குறிப்பில் ‘முஸ்லீம்’ என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக ‘இஸ்லாம்’ என்று

Verified RealEstate™

குறிப்பிடும்படி அரசை கேட்டுக் கொண்டு தமிழ்நாடு வக்ஃபு வாரிய குழுமம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்று தெரிவித்துள்ளார். அதற்கேற்ப தேவையான நடவடிக்கையெடுக்குமாறு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மைச் செயல் அலுவலரின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்தது. அண்டை மாநிலங்களான கேரளம் மற்றும் கர்நாடகத்தில் 'முஸ்லீம்' இனத்தவரின் மதம் 'இஸ்லாம்' என்பது குறிப்பிடப்படுவதாகவும் தெரியவருகிறது. எனவே, தமிழ் நாடு வக்ஃபு வாரிய முதன்மைச் செயல் அலுவலரின் பரிந்துரையை ஏற்று, பிறப்பு இறப்பு, பள்ளி பதிவேடுகள் மற்றும் அரசு ஆவணங்களில் முஸ்லீம்களின் மதம் பற்றிய குறிப்பில் 'இஸ்லாம்' என்று குறிப்பிடுமாறு ஆணையிடலாம் என்று அரசு முடிவு செய்கிறது.

4. இம் முடிவின்படி, பிறப்பு இறப்பு, பள்ளிப் பதிவேடுகள் உட்பட அனைத்து அரசு ஆவணங்களிலும் முஸ்லீம்களின் மதம் பற்றிய குறிப்பில் 'இஸ்லாம்' என்று குறிப்பிடுமாறு அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அ. நாகராஜன்,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்,

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல
இயக்குநர், சென்னை-5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து துறைத்தலவர்கள்.
xxxx
xxxx

நகல் :
ஆணையர்,
தமிழ்நாடு இல்லம், சாணக்யபுரி, புதுடெல்லி-21
xxx
xxx

/ஆணையின்படி அனுப்பப்படுகிறது/

(ஒம்/-)
பிரிவு அலுவலர்

/உண்மை நகல்/

பதிவுத்துறைத்தலைவருக்காக

Verified RealEstate™